JL
715M211,N37BK
N42.7.10-12.
145695

தொகுதி 7]

# பாலர் க

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபாநு ஸூ தை மீ
JANUARY 1943

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

## வாழ்த்து

...! போங்குக பொங்கல் !!
...! என்றும் மங்களம் !!
...பொங்கல் ஆண்டிலோர் திருநாள்
...மறைந்திட மேகந் திகைந்திட
...திகள் செய்திட சுகங்கள் பெருகிட
தோரணம் தொங்கிட தொல்லைகள் தொலைந்திட
பாலும் பொங்கிடப் பாலர்கள் கூடிட
தருமந் தழைத்திடத் தமிழகம் துலங்கிட
உலகம் செழிக்க உமையருள் கிட்டுக.
பொங்கல் பொங்குக ! பொங்கல் பொங்குக !
ஆப்த அன்பர்கள் ஆசிகள் அளிக்கவும்
மங்களம் எங்குமே ! முழங்குக என்றுமே !!

—**T. M. Pitchiah.** *Munnirpallam.*

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | *அடுத்தாற்போல் என்ன ?* .... .... .... <br>—M. S. சுந்தரேசுவரன், M.A., L.T. | 227 |
| 2. | *கல்வியும் இளஞ்சாரணீயமும்*—VI .... .... <br>—K. K. லக்ஷ்மி நாராயணன் | 231 |
| 3. | *செய்தித் திரட்டு* .... .... .... | 234 |
| 4. | *பத்திராதிபர் குறிப்பு* .... .... .... | 242 |


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1943 ஜனவரி மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

தஞ்சாவூர் — Tan. 83, 87, 94 திருச்சி — Tri. 7.
ராமனுதபுரம் — Rd. 62. மதுரை — Md. 41, 42, 44
திருநெல்வேலி — Tin. 34. கோயமுத்தூர் — Co. 26, 56.

குறிப்பு.—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன் களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

# பாலர் கல்வி

| தொகுதி 7 | 1943 ஞு ஜனவரி மீ<br>சித்ரபாநு ஞு தை மீ | பகுதி 10 |
|---|---|---|

## அடுத்தாற்போல் என்ன ?

M. S. சுந்தரேசுவரன், M. A., L. T.

சென்ற ஆறு வருஷங்களாக நமது மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட முயற்சிகளும், அவை காரணமாக விளைந்த நன்மைகளும் மூலை முடுக்குகளிலிருந்தும்கூட உத்தியோகஸ்தர்கள் பலராலும் விளம்பரப்படுத்தப்பட்டன. சந்தர்ப்பம் ஏதாயினும், மேடை எதுவாயினும் இவ்விஷயங்களே இடைவிடாது வெளியிடப்பட்டன. வருஷத்திற்கு 2000 வீதம் பயனில்லாத பள்ளிகள் மூடப்பட்டன. பாடசாலைகள் குறைந்துகொண்டே போனாலும் மாணவ மாணவிகளின் தொகை அதிகரித்து வருகிறது. துணைப் பாடசாலை யில்லாத எல்லாப் பாடசாலைகளிலும் ஐந்து வகுப்புகள் வைக்கப்பட்டன. நான்கு, ஐந்து இவ்வகுப்புகளில் படிக்கும் பிள்ளைகளின் சங்கியை அதிகரித்துள்ளது. தனிப் பெண் பாடசாலைகளிலும், கலப்புப் பாடசாலைகளிலும் அதிகமான பெண் பிள்ளைகள் சேர்ந்து படித்து வருகிறார்கள். தேக்கம், விரயம் இவையிரண்டும் குறைந்துகொண்டே வருகின்றன. ஆரம்பப் பாடசாலைகளுக்கான பாடத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு அமுலிலிருந்து வருகிறது. உயர்தர எலிமெண்டரி பாடசாலைகளில் அளிக்கப்படும் போதனையைச் சீர்திருத்தி உயர்த்த எட்டாம் வகுப்புக்கு மாகாண முழுவதற்கும் பொதுவான ஒரு பரீட்சையும் வைக்கப்பட்டு நடந்து வருகிறது. இவற்றால் எல்லாம் முழுப்பலனும் கிட்டிவிட்டதென்றே மறுதளிக்காமல் ஒப்புக்கொள்வோம். ஆனால், பொதுஜனம், "அடுத்தாற்போல் என்ன?" என்ற கேள்வி கேட்கிறது. "பழைய பிரதாபத்தைக் கேட்டுக் காது பொளிந்து விட்டதே! புதுச் செய்தி ஏதாவது உண்டா?" என்று கேட்கவேண்டியது சகஜமே.

பொதுஜனத்திற்குத் தெரிந்த அளவில் புதுச் செய்தி ஒன்றும் இருப்பதாகக் காணவில்லை. மகா யுத்தத்தில் முழுதும் மூழ்கி ஈடுபட்

சென்னை 600 028.

டிருக்கும் நாடுகளில் கல்வி யபிவிருத்திக்கான முயற்சிகள் தளராமல் எடுக்கப்பட்டு வருவதோடு கல்விக்கு அதிகரித்துவரும் தொகையும் செலவிடப்பட்டு வருகிறது. இன்னும் யுத்தத்திற்குப் பிறகுக் கல்வித்திட்டம் எவ்வகைத்தினதாக அமைக்கப்படவேண்டும் என்பதைப் பற்றிய யோசனைகளும் தீவிரமாக நடந்து வருகின்றன. நம் நாட்டிலோ வென்றால் விஷயங்கள் வேறுவிதமாகவே நடந்துவருகின்றன. ராணுவத் தேவை காரணமாகப் பாடசாலைகள் பல அடைக்கப்படுகின்றன. நெருக்கடி காரணமாகச் செலவு குறைக்கப்பட்டு சாதாரணத் தேவைகளும்கூட வேண்டிய அளவுக்குப் பெறுவது கடினமாயிருக்கின்றன. எதிர்காலத்தைப் பற்றிய பேச்சோ இல்லவே இல்லை. என்றாலும், தாழ்ந்து கிடக்கும் இந்நாடு முன்னிலைக்கு வந்து, குடியேற்ற நாட்டு அந்தஸ்துள்ள சுயேச்சை நாடாக விளங்கவேண்டுமென அனைவரும் பறை சாற்றுகின்றனர். அது எவ்விதம் என்பதுதான் பொதுஜனத்திற்கு விளங்கவில்லை. இது சம்பந்தமாக, சமீபத்தில் நடந்த அகில இந்தியக் கல்வி மகாநாட்டில் தலைமை வகித்த மகாகனம் **M. R.** ஜயகர் அவர்கள் தமது பிரசங்கத்தில் கூறினது கவனிக்கத் தக்கது.

"மற்ற தேசங்களில் யுத்தம் கல்விச் சீர்திருத்த விஷயமாகக் குறுக்கிடவில்லை. கடந்த யுத்தத்தில், வெகு தீவிரமாகப் போர்புரிந்த இங்கிலாந்தில், யுத்தம் இருந்தும் கல்வியில் விசேஷ முன்னேற்றம் ஏற்பட்டது. இந்த யுத்தத்தில், கல்விச் சபையின் தலைவரான **Mr. R. A.** பட்லர், கல்வியின் இலட்சியங்கள், முறைகள் இவற்றைச் சீர்திருத்தி அமைப்பதற்காக அதிகமான தொகை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி யுள்ளார்........................................யுத்தத்திற்குப் பிறகு செய்ய வேண்டியதற்கான விஷயங்களுக்குக் கல்விச் சபையின் திட்டங்கள் தயாரா யுள்ளன என்றும், அவற்றை அமுலுக்குக் கொண்டுவரும் நோக்கத்தோடு பொதுமக்களின் ஆலோசனைக்காக வெளியிடப்படும் என்றும் கூறப்படுகிறது. கல்வியில் பின்னடைந்துள்ள சீனாபோன்ற தேசத்தில், சென்ற பல வருஷங்களாக யுத்தம் நடந்துகொண்டிருந்தும் கல்விச் செலவைக் குறைக்கும் பான்மை காணப்படவில்லை. தன் கல்வித் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காகச் சீனா தன் பொருளாதார பலத்தையெல்லாம் திருப்பிக்கொண்டு வருகிறது........................

"கல்விச் செலவு சமுத்திரத்தில் பெருங்காயத்தைக் கரைத்தது போல் சிறிதளவே இருந்துவரும் இந்தியாவில் கல்வி விஷயத்தில் அசட்டுச் சிக்கனம் பண்ணுவது வெகு அதிருப்திகரமானதாகும். யுத்த சந்தர்ப்பம் தான் கல்வித் திட்டங்களைத் தீவிரமாகக் கொண்டுவந்து பரப்புவதற்குச் சிறந்த சமயம் என எண்ணுபவர்களில் நான் ஒருவன். ஏனென்றால், மற்ற காரணங்களோடு அக்காலத்தில் மனிதரின் மனம் பண்டைய தவறுகள், அநீதிகள் இவற்றை எதிர்த்து நிற்கும். ஆகையால், நாம் நமது கல்வித் திட்டத்தை இப்போதே வகுத்துக்கொள்ள முயற்சி எடுக்க

வேண்டும். யுத்தம் முடிந்தபின் என்றால், நமக்கு அவகாசமும் இராது, திட்டங்களைக் கொண்டுவந்து நடத்தத் தயாராகவும் இருக்கமாட்டோம். அதிக சிறந்ததும், விரிவானதுமான பொதுக் கல்வித் திட்டத்தை நாம் வகுத்துக்கொள்ள வேண்டும். அத்திட்டம், சுயேச்சை, சத்தியம், இலட்சணம் இவற்றில் அழியாத நம்பிக்கையை உண்டாக்கி, தேசிய ஒற்றுமை, சமாதானம் இவற்றை நிறுவுவதை இலட்சியமாகக் கொள்ளவேண்டும்.''

இம்மாதிரியே பலர் நம் நாட்டில் கல்வி யபிவிருத்தி விஷயமாக இடைவிடாது முறையிடாமல் மௌனமாக இருப்பதே தற்காலத் திட்டத்தின் முதன்மையான தோஷமாகும். இந்த தோஷம் காரணமாகவே தான் நம் நாட்டில் சிறுபான்மையோரே கல்வி கற்றவராய் இருக்கின்றனர்; பெரும்பான்மையோர் அஞ்ஞானத்தில் ஆழ்ந்து கிடக்கின்றனர். கற்றவர்களும் மற்றவர்களுக்குக் கல்வியின் நன்மையைக் கொடுப்பது தம் பொறுப்பும், கடமையும் ஆகும் என்று உணராதிருக்கின்றனர்.

தற்போது நடந்துவரும் யுத்தம், இதுவரை நடந்த யுத்தங்களைக் காட்டிலும், மனிதன் போற்றும் சுயேச்சை, சத்தியம், இலட்சணம் இவற்றை நிலைநாட்டி ஓங்கச் செய்வதற்கு, ஒரு புதிய அமைப்பும் கட்டுப்பாடும் அவசியமென்பதை விளக்கியுள்ளது. இப்புதிய ஏற்பாட்டில் உயர்வு தாழ்வு, உழைப்போன் உறங்குவோன், இருப்பவன் இல்லாதவன் வலியோன் எளியோன் முதலிய வித்தியாசங்கள் இல்லாமல், ஒவ்வொரு மனிதனும் தன் அளவுக்கு நிறைந்த வாழ்வு வாழவும், அவ்வாறு வாழ்வதற்கு ஒரு தேசத்தினர் மாத்திரமே யல்லாது எல்லாத் தேசத்தினர்களும் ஒன்றுபட்டுத் தங்கள் தங்கள் சமூகத்தைத் திருத்தி அமைத்துக் கொள்வதோடு பிற தேசத்தினர்களோடு ஒத்துழைக்கவேண்டுமென்றும் பிரமுகர்கள் பலர் கூறி வருகிறார்கள். இத்தகைய சமூகத்தை நம் நாட்டுக்கு உகந்த வகையில் நாம் அமைத்துக் கொள்ளவேண்டாமா? அதன் இலட்சியங்களுக்கு இசைய நம் கல்வித் திட்டத்தை நாம் திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டாமா? அதற்கு இப்போதே நாம் தீர ஆலோசனை செய்து ஒரு திட்டத்தை வகுத்துக் கொள்ளவேண்டாமா?

நம் நாட்டிற்கு உகந்த திட்டம் யாது என்பதைப்பற்றியும், அதன் இலட்சணங்கள் யாவை என்பதையும் ஸ்ரீ. ஐயகர் அவர்களே தம் பிரசங்கத்தில் விவரித்துள்ளார். அவர் விவரித்துள்ள திட்டம் குறுகிய தேசிய இலட்சியம் கொண்டதாய் இராமல் பரந்த நோக்கமுள்ளதாயும், தேசத்திற்கு உகந்ததாயும் உளது. அவர் கூறியபடி அதன் இலட்சணங்களாவன:

(1) ஒவ்வொரு மனிதனும், ஸ்திரீயும், குழந்தையும் தன் மனிதத் தன்மையை முழு அளவுக்கு வளர்த்துக்கொண்டு நிறைந்த வாழ்வு வாழ்வதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கக் கல்வித் திட்டத்தின் எல்லாப் பிரிவுகளிலும் பொது மக்களின் நிதரிசனமான தேவைகளையே அத்திவாரமாகக் கொண்டு அது அமைக்கப்படவேண்டும்.

(2) அதன் இலட்சியங்கள், முறைகள், தேர்ச்சி அளவுகள் அனைத்தும் ஜன சமூகத்திலுள்ள எல்லா வகுப்பினரின் பொருளாதார, சமூக, கலாசார வாழ்க்கை விஷயங்களோடு இசைந்து நிற்கவேண்டும்.

(3) அரசாங்கமும் மக்களும் கலந்து யோசித்துப் பழுதற வகுக்கும் தன்மைகள் கூடிய புதிய பிரஜத்துவத்தை அது அடிப்படையாகக் கொண்டு விளங்கவேண்டும்.

(4) யுத்தத்திற்குப் பிறகு ஏற்படப் போகும் புதிய ஸ்தாபனங்களை நிர்வகித்து நடத்த, சலனமற்ற நிதானம், பட்சபாதமின்மை, புத்தி யூகமும் நன்மையும் நிறைந்த தலைமை ஆகிய இலட்சணங்கள் கூடிய நிர்வாகிகளை அது தயாரிக்கவேண்டும்.

(5) அது தேசிய ஒற்றுமை, அமைதி இவற்றைப் பாராட்டி நிற்கவேண்டும்.

இவ் விலட்சணங்கள் நிறைந்த திட்டத்தையே 1937-ம் வருஷத்தில் வர்தாக் கல்விக் கமிட்டியார் நமக்கு வகுத்துதவினர். அரசியல் அபிப்பிராய பேதங்கள் காரணமாய் அது வேண்டிய அளவுக்கு ஆதரவு பெறுமற் போயிற்று. காந்தியடிகள் அதில் முயற்சி எடுத்ததனால் அதைக் காங்கிரஸ் திட்டம் எனக் கண்டனம் செய்து பிற கட்சியினர் கண் எடுத்துப் பார்க்காமலே புறக்கணித்தனர். காங்கிரஸ் அரசாங்களில் சிலவும் கூடப் பேருக்கு முயற்சி எடுப்பதுபோல் காட்டி அதற்குப் பெருந் தீங்கு இழைத்துவிட்டன. இது காரணமாய் அரியதோர் சந்தர்ப்பத்தை நாம் நழுவவிட்டோம். இப்போதும் அதற்கும் அரியதோர் சந்தர்ப்பம் நம் முயற்சி யில்லாமலே கிடைத்துள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்கள் அத்திப்பூ பூத்தாற்போல் எப்போதாவது தான் வாய்க்கும். இதையும் நாம் நழுவ விடுவோமாயின் நம் கதி என்ன? ஊரெங்கும் எடுத்ததற்கெல்லாம், சபைகளும். சங்கங்களும் தோன்றி, மகா நாடுகள் கூடவில்லையா? நாம் கோரும் அனைத்துக்கும் இன்றியமையாததாய் விளங்கும் கல்வி யபிவிருத்திக்குப் பிரமுகர்களும், கல்வி யறிஞர்களும், கலாசாலைகளும் முயற்சி இப்போதே எடுக்கவேண்டாமா? வகுக்கப் போகும் திட்டம் மக்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடியதா யிருக்க வேண்டுமாதலால், இம்முயற்சியில் வித்தியாசமின்றி யாரும் கலந்து கொள்ளவேண்டியது அவசியம். அப்போதுதான் அத்திட்டம் பொது ஜன ஆதரவைப் பெற்று, எதிர்ப்பு என்பது இல்லாமல், உடனே அமுலுக்குக் கொண்டுவரக் கூடியதாயிருக்கும்.

இதுகாறும் நாம் வரப்போகும் தலைமுறைக்குச் செய்யவேண்டிய கடமையை மறந்துவிட்டோம். இப்போதாவது நாம் விழித்துக் கொண்டு, மீறிப்போய் விட்டது என்று வருந்துவதற்கு இடம் இல்லாமல் முயல்வோமாக!

# கல்வியும் இளஞ்சாரணீயமும் - VI

---

K. K. Lakshminarayanan, (*Saidapet*)

(216-ம் பக்கம் தொடர்ச்சி)

இளஞ்சாரணீயமும், சாரணீயமும் தாய்ப்பாஷையில் நடத்துவதின் நோக்கம்:—நமது நாட்டில் தாய்பாஷையில் இதன் சம்பந்தமான நூல்களை பரப்பவேண்டும் என்பதுதான். தற்சமயம் நமது சாரணீய இயக்கம் வெகுவாக எல்லா ஊர்களிலும் முக்கியமாக கிராம பாடசாலைகளிலும், இல்லாத காரணம் தாய்ப் பாஷையில் சாரண நூல்கள் அதிகமாக இல்லாததுதான். ஆகையினால் கூடியமட்டில் அனுபவம் வாய்ந்தவர்களும், அறிவாளிகளும், தம்மால் ஆனவரை சாரண நூல்களை தாய்ப் பாஷையில் எழுதிவந்தால் "சிறுதுளி பெருவெள்ளம்" என்பதுபோல் நாளடைவில் தாய்ப் பாஷையில் சாரண நூல்கள் அதிகமாகிவிடும். பிறகு அநேகமாக எல்லா கிராம பாடசாலையிலும் வெகு சுலபமாகவும், சீக்கிரமாகவும், பரவ எதுவாக விருக்கும். உதாரணமாக சாரண நூல்கள் எளிய நடையில் இருந்தால் கிராம ஆசிரியர், ஒருவர் உதவியின்றி சீக்கிரம் ஆரம்பிக்க முடியும். அப்படியில்லாமல் ஆங்கிலத்திலும், பெரிய பெரிய புத்தகமாகவும், விலை அதிகமாகவும் இருந்தால் கிராம ஆசிரியர்களுக்கு அது அசௌகரியமாக இருக்கிறது. இக்காரணங்களால்தான் சாரணீய நூல்கள் தாய்பாஷையில் எளிய நடையில் எழுதியதாகவும், குறைந்த விலையிலும் இருந்தால்தான் பாமர மக்களிடையேயும்கூட மனதில்படிய சுலபமாக இருக்கும்.

இதர சிங்கக்குட்டிகளுடன் நம் குருளையர்கள் கலந்து கோள்வது:- நாம் எப்படி ஒருவரோடு ஒருவர் கலந்து அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஆசிரியர் சங்கம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோமோ, அம்மாதிரி குருளையர் இயக்கமும், நாளடைவில் முன்னுக்கு வர, "கிணற்றுத் தவளைபோல்" இராமல் குருளையர் இயக்க சம்பந்தமாக நாம் வேறு குருளையர் இயக்கம் இருக்கும் இடத்திற்கு நம் சிறுர்களை அழைத்துக்கொண்டு போய், அங்கே "தீக்கூட்ட விளையாட்டு" "**Camp Fire**" வைத்துக்கொண்டும், மற்ற இயக்கத்தை ஒருநாள் நம் பள்ளிக்கும் வரச்சொல்லியும், தவிர அவ்வப்போது இயக்கம் அபிவிருத்தியாதல்பொருட்டு மற்ற குருளையர் இயக்க ஆசிரியர்களையும் வரவழைத்து அவரவர்கள் அனுபவத்தில் கண்ட விஷயங்களைச் சொல்லி அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். தவிர அருகிலுள்ள பள்ளிக்கூடங்களிலுள்ள குருளையர் இயக்கங்கள் எல்லாவற்றிற்கும், ஒரு போட்டிப் பந்தய விளையாட்டு, பொருட்காட்சிச்சாலை, குருளையர் பாட்டுப் போட்டி, சுகாதாரப் பாட்டுப்போட்டி, தமாஷ் உடுப்புப் போட்டி,

முதலியன வைத்துக்கொண்டு குறைந்தது வருஷா வருஷம் அருகிலுள்ள குருளையர்கள் இயக்கங்களையும், ஒன்று சேர்த்துக்கொண்டு "சாரண வாரக் கொண்டாட்டம்" நன்றாகக் கொண்டாடினால்தான் ஜனங்களும் அந்தச் சமயத்திலாவது இயக்கத்தைப்பற்றி அறிந்துகொள்வார்கள். இதற்கு நடுவில் இவ்வியக்க சம்பந்தமாக "சொற்பொழிவுகள்" நடத்த அநேகர்களை வரவழைக்கவேண்டும். அவர்கள் கேட்பவர்களுக்குத் தகுந்தமாதிரி எளிய நடையில் பிரசங்கம் செய்ய வேண்டும். சுகாதார இன்ஸ்பெக்டர், ஹெல்த் ஆபீஸர் முதலியோர்கள் இருந்தும், தினம்தோறும், சுகாதாரத்தை அவ்வப்போது கவனித்துக்கொண்டு வந்தாலும், அதற்கென்று "சுகாதார வாரக் கொண்டாட்டம்" வைத்துக்கொண்டு பாமர மக்களிடையேயும் புரியும்படி செய்கிறார்கள். தவிர, "**Education Week**", "**S. P. C. A. Week**", "**Baby Week**", "**Red Cross Week**" நடக்கிறது. ஆகையினால் நமது இயக்கத்துக்கும், "**Scout Week**" நன்றாக நடத்த முயன்று நடத்தவேண்டும். இவ்விஷயத்தில் இதர குருளையர் இயக்கங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்,

குறிப்பு :—போட்டிப் பந்தயம் முதலியன நடத்தும் பொருட்டு ஒரு தனிக் கமிட்டி ஊர் பிரமுகஸ்தர்களையும், கனவான்களையும் வைத்துக்கொண்டு ஏற்படுத்தவேண்டும். பரிசளிக்க முடிவு சொல்லவும் அவர்கள் தீர்ப்பை முடிவாக வைத்துக் கொள்ளவேண்டும். இதன் செலவிற்காக பிள்ளைகளைத் தொந்திரவு செய்யக்கூடாது. நம் சாமர்த்தியத்தால் ஊரிலேயே பணம் வசூல் செய்து பணம் நம் கையில் இல்லாமல் கமிட்டியிடமே கொடுத்துப் பார்த்துக் கொண்டால் நம் பேரில் சந்தேகம் இல்லாமல் இருக்கும். தவிர ஊராருக்கும் கொண்டாட்டத்தில் அதிக பொருப்பு இருக்கும். இதற்காக பணம் அதிகமாக செலவழிக்காமலும், ஜில்லா போர்டிலிருந்தும், அல்லது மானேஜ்மெண்டிலிருந்தும், அல்லது ஊராரிடமிருந்து அதிக பணம் இல்லையென்று கொண்டாடாமல் இராமல் "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பதுபோல் திருபதியுடன் நன்றாகக் கொண்டாடவேண்டும்.

**ஊரார் ஒத்துழைப்பு** :—நாம் மாத்திரம் சாரணீயத்தில் உற்சாகம் எடுத்துக்கொண்டால் போதாது. ஊராரும் இதில் ஊக்கம் கொள்ள வேண்டும். பணக்காரர்களாயிருந்தால் அவர்களை நாம் சாரணீயத்தில் பணம் கட்டி ஆயுட்கால அங்கத்தினராகச் சேரச் சொல்லலாம். இல்லாவிடில், நம் குருளையர் இயக்கத்தில் உள்ள ஏழ்மையானச்சிறுர்களுக்கு உடுப்புகள் **(cub dress) (or cub uniform)** தைத்துக் கொடுக்கச் சொல்லலாம். மற்றவர்களில் சில பேர்களை நம் ஊர் சாரண இயக்கத்தில் கமிட்டி மெம்பராகவும், தலைவராகவும், காரியதரிசியாகவும் நியமித்து வைத்தால் இயக்கம் வெகு சீக்கிரம் முன்னுக்குவர மார்க்கமுண்டு. இதில் சேராத மற்றவர்களை சாதாரணமாக நடக்கும் சாரணீய சம்பந்தமான "சொற் பொழிவு," "தீக்கூட்ட விளையாட்டு," முதலியவைகளுக்கு

அழைத்து வந்தால் சாரணீயத்தின் முக்கியத்தை உணர்ந்து பின் ஊரார் சாரணீயத்தின் முன்னேற்றத்திற்காக நாம் எதை அவர்களிடம் சொன்னா லும் செய்வார்கள்.

சிம்மநாதங்கள் (Yells) :—குருளையர்களுக்கு சிம்மநாதங்களில் தான் சந்தோஷம் பொங்குகின்றது. நமது "நிகழ்ச்சி நிரலில் கூட" நடுவில்கூட சிம்மநாதங்கள் சொன்னால் பிள்ளைகளுக்கு உற்சாகம் தோன் றும். இளஞ்சிறுர்களுக்கு மனதில் கஷ்டம், சோர்வு, கூச்சம், சலிப்பு, பயம் தெரியாமல் உற்சாகத்தையும், சந்தோஷத்தையும் கொடுப்பது சிம்மநாதம் தான். உதாரணமாக பல்லக்கு தூக்குபவனும், சுவாமியைத் தூக்குபவனும், ஏற்றம் இறைப்பவனும், துணி துவைக்கும் வண்ணானும், நெல் குத்துபவர்களும், ஏதாவது பாட்டு பாடிக் கொண்டேயாவது, ஏதாவது சொல்லிக்கொண்டேயாவது காரியம் செய்கிறுர்கள். இவைக ளெல்லாம் தொன்று தொட்டு நடந்து வருகிறது. காரணம் ஜனங்களுக்கு உண்டாகும் சோர்வு, சலிப்பு, இவைகள் போவது ஒன்று. தவிர புதிய உற்சாகம் வருவது. மேலும் ஒரு ஆவேசம் வருவதுபோல் உடம்பில் கஷ்டம் தோன்றுமல் காரியம் செய்யமுடியும். ஏற்றப் பாட்டில்கூட மாராயணம், பாரதம் முதலிய கதை இருக்கிறது. இப்பொழுதும் இறைக் கும்போது பாடுகிறுர்கள். ஆகையால் நாம் உண்டாக்கவில்லை. மேற் கூறிய காரணங்களால் நாம் இளங் குழந்தைகளுக்காக எளிய நடையில் சிம்மநாதங்களை தமிழில் சில கட்டிக்கொள்ளலாம். சிம்மநாதங்களும் சிறு பாட்டுகளும் தான் சேராத மற்ற சிறு பிள்ளைகளை நம் இயக்கத்தில் சேர்க்க நம் கையிலுள்ள வசீகர மருந்து.

தணிக்கையின் அவசியம் :—நாம் இளஞ்சிறுர்களுக்கு உற்சாகம் தூண்டவும், ஊரார்களுக்கு இதன் முக்கியம் தெரியவும், அடிக்கடி சாரணீய சம்பந்தமான உத்யோகஸ்தர்களை வரவழைத்து நம்குருளையர் இயக்கத்தை தணிக்கை செய்ய ஏற்பாடு செய்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் நம் இயக்கத்தில் இல்லாத புதிய புதிய முறைகளையும், பாட்டுகளையும் சொல் லிக் கொடுப்பார்கள். தவிர நம் இயக்கம் முன்னுக்கு வர சில சீர்திருத் தங்களையும், ஊரார்களுக்கும், சில சொற்பொழிவுகளையும் செய்வார்கள். உதாரணமாக, சாரணீய ஜில்லா கமிஷனரையும், மாகாண ஆர்கனைஸிங் கமிஷனரையும், வரவழைக்கலாம்.

வந்தனம் செலுத்தும் முறை :—நமது சாரணத் தலைவர்களுக்கு வந்தனம் செலுத்தும்போது அவர்கள் பேரைச் சொல்லி தலைவர், "ஹர்ஷ், ஹர்ஷ்" என்று நாம் சொல்ல குருளையர்கள் "ஜே" என்று சொல்லலாம். இம்மாதிரி மூன்று தடவை சொல்லவேண்டும். (ஹர்ஷ் என்றால் ஹிந்தியில் அவர்கள் சந்தோஷமாக இருக்கட்டும் என்று அர்த்தம்.)

[தொடரும்]

# செய்தித் திரட்டு

## ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்

1. 20—12—42-ல் ஆனந்த விகடன் ஆசிரியர் ஸ்ரீ வெங்கட்ட ராமன் அவர்கள் தலைமையில் இப்பாடசாலை குருளையரின் காம்ப் பையர் (Camp fire) நடைபெற்றது. குருளையர் ஓர் கதம்பக் கச்சேரி நடத்தினர்.

2. 19—12—42-ல், சென்னையில் சென்ற ஆறு வருஷமாக நடந்துவரும் பைசானி மாதவசெட்டி திவ்வியப் பிரபந்த பண்ணிசைப் போட்டியில் கலந்துகொண்டு அதிகமான பரிசுகளை இப்பள்ளிக்கூடமே அடைந்து வந்ததால், அந்நிதியார் இப்பள்ளிக்கூடத்திற்கு ஒரு வெள்ளிக் கிண்ணம் பரிசளித்தனர்.

3. 28—12—42-ல் இப் பள்ளிக்கூடத்தின் அலுவல்களைப் பாராட்டி, மாம்பலம் விசுவநாத சுவாமி கோவாபரேடிவ் பில்டிங் சொஸைடியார் ரூ. 25 நன்கொடை அளித்து, பிரதி வருஷமும் தம் நிதியிலிருந்து உதவி புரிவதாகக் கூறினர்.

4. 6—1—43-ல் சங்கீதத்திற்கு மூல புருஷரான தியாகராஜ ஸ்வாமிகளின் ஜயந்தி கொண்டாட்டத்தையொட்டி, ஒரு பாட்டுப் போட்டியும், ஸ்ரீ முத்து சுவாமி அய்யரால் 'தியாகப் பிரம்மத்தைப்பற்றி சொற்பொழிவும், சங்கீத உபாத்தியாயர் ஸ்ரீ அனந்தாசாரியரால் ஒரு சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றன. குழந்தைகளுக்கு சர்க்கரை வழங்கப்பட்டது.

---

## டீச்சர் மானேஜர் யூனியன், போளூர்.

12—12—42 ல் தாலுக்கா அட்வைசரி கமிட்டி மெம்பர் படேல் அல்லாபாஷ் சாகிப் அவர்கள் தலைமையில் இந்த யூனியன் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது, ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு ஹெட்மாஸ்டர் பதவி அளிக்கவேண்டுமாயும், நாலில் ஒரு பாகம் சிறுமிகளைச் சேர்க்கவேண்டுமென்று நிர்ப்பந்திப்பது நியாய மல்லவென்றும், யுத்த அலவன்ஸ், அட்வான்ஸ் கிராண்டு, இங்கிரிமெண்டு, தபால்களை மாமூல்படி ஆபீஸில் சேர்ப்பது, முதலிய விஷயங்களைப் பற்றிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## செஞ்சி தாலூக்கா அவலூர் பேட்டை செண்டர்.

13—12—42 ல் இவ்வூர் பிள்ளைகளுக்கும், சுற்றியுள்ள பள்ளிக் கூடப் பிள்ளைகளுக்கும் பந்தய விளையாட்டுகள் நடைப்பெற்றன. சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர், ஸ்ரீ லட்சுமி நரசிம்மன் அவர்கள் தலைமை வகித்தார். வெற்றி பெற்றவர்களுக்கு தாசில்தார் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யங்கார் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

## செஞ்சி தாலூக்கா ஆரம்ப ஆசிரியர் யூனியன்.

20—12—42 ல் இந்த யூனியன் ஸ்ரீ நாராயண ரெட்டியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது யுத்தகாலமும் ஆரம்ப ஆசிரியர் நிலைமையும் என்ற விஷயம் பற்றி பலர் பேசினர். பின்பு, பஞ்சப் படி கொடுத் துதவும்படியும் புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு சர்க்கார் திட்டப்படி சம்பளம் கொடுக்கும்படியும், ஜில்லா போர்டாரை வற்புறுத்தும் படியும், இரண்டு வருஷ போதனை பயிற்சிக்குப் பிறகு 18 மாதம் வேலை செய்து சர்டிபிகேட் வாங்கவேண்டு மென்ற நிபந்தனையை ரத்து செய்யுமாறும் சர்க்காரை வேண்டிக் கொள்ளுவதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## காஞ்சீபுரம் தாலூக்கா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்

26—12—42 ல் இந்த யூனியன் மகாநாடு நடைபெற்றது. ஸ்ரீ வாசுதேவ ராவ் அவர்கள் தலைமை வகித்தார். சுமார் 100 அங்கத்தினர்கள் வந்திருந்தனர். டிப்டி இன்ஸ்பெக்டரும் ஜில்லா போர்டு கல்வி அதிகாரியும் வந்திருந்தனர். காலையில் சங்கம் பொதுக் கூட்டம் நடந்தது அதில் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மாலையில் கூட்டத்திற்கு ஸ்ரீ கேதாரி ராவ் அவர்கள் தலைமை வகித்தார். அப்பொழுது, ஸ்ரீ M. S. நடேசன் அவர்கள் 'ஆரம்ப பாடசாலைகளில் இயற்கைப் பாடம்' என்பது பற்றியும், ஸ்ரீ கிருஷ்ண ராவ் அவர்கள் 'ஆரம்ப ஆசிரியர்களும் சமூகமும்' என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். தலைவர் ஆசிரியர்களுக்குச் சில புத்திமதிகள் கூறினர்.

ஜில்லா போர்டு ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வும், பஞ்சப்படி ரூ. 1 வீதமும் கொடுத்ததற்கு நன்றி செலுத்தவும், பஞ்சப்படியை மற்ற சிப்பந்திகளுக்குப் போல் அதிகமாகக் கொடுக்கும்படி கேட்கவும், சர்வீஸுக்கு ஏற்ற சம்பளம், ஜில்லா யூனியன் ஏற்படுத்தல், சம்பள செக்கு மாற்றும் செலவு, பாட புத்தகங்கள், சாதல்வார், ஜில்லா போர்டு ஆசிரியர்கள் ஜாபிதா, தலைமை ஆசிரியர்களுக்கு பரீக்ஷாதிகாரம் முதலியன பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், பள்ளிப்பாளையம்

19—12—42 ல் ஆசிரியர் ஸ்ரீ R. N. நரசிம்மாசார் அவர்கள் தலைமையில் இச் சங்கம் கூடிற்று. தலைவர் 'அகில இந்திய மாகாணச் சட்ட சபைகள் அமைப்பு வேலை' என்பது பற்றியும், ஸ்ரீ T. N. அப்புசாமி அய்யர் ஐந்தாவது வகுப்புக்கு 'விஷய சுருக்கப் (பெருக்க) பயிற்சி' என்பது பற்றியும், ஸ்ரீ A. P. வெங்கடசுப்பய்யர் 'யுத்த முயற்சி' என்பதுபற்றியும், ஸ்ரீமான்கள் R. கந்தசாமி பிள்ளை, A. பழனிசாமி

'போதனு முறை உபகரணங்கள் தயாரித்தல்' என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள்.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம். சோழவந்தான்

இக்சங்கத்தின் ஆண்டு விழா, நிலக்கோட்டை ரேஞ்சு கல்வி அதிகாரி ஸ்ரீ ராஜகோபால அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வூர் ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ மகாலிங்கம் அய்யர் 'ஆரம்ப ஆசிரியர்களின் பொறுப்பு' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார். தலைவர் பின்னுரைக்குப் பின் சிற்றுண்டியும், புகைப் படம் பிடித்தலும் கூட்டம் இனிது கலைந்தது.

---

### ஸ்ரீவரத வெங்கட்டரமண வித்யாலயம், வெங்கடாசலபுரம்

4—12—42 ல் 6, 7, 8 வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்களும் மதுரைக்கு உல்லாசப் பிரயாணம் சென்று அங்குள்ள கல்வி ஸ்தாபனங்கள், சரித்திர சம்பந்தமான இடங்கள், க்ஷேத்திர விசேஷ அம்சங்கள் முதலியவற்றைக் கண்டுகளித்துத் திரும்பினார்கள்.

---

### பெரியகுளம் தாலூக்கா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்

20—12—42 ல் இச்சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழா உத்தமபாளையம் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ ஜம்புநாதய்யர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. விஜயம் செய்திருந்த ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர், ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் பல சொற்பொழிவு செய்தார்கள். பின்பு, பஞ்சப்படி கொடுத்துதவியதற்காக ஸ்பெஷல் ஆபீஸருக்கு நன்றி செலுத்தவும், தங்கள் குழந்தைகளுக்கு ஹைஸ்கூலில் இலவச படிப்பு அளிக்கவும், சாதல்வார் செலவுகளை ஜில்லா போர்டாரே செய்து கொடுக்கும்படியும், உணவுப் பொருள்களை சேமித்துக்கொள்ள மூன்று மாதச் சம்பளத்தை அட்வான்ஸாக கொடுத்துதவும்படியும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### போர்டு ஆண்பாடசாலை, கருணைக்குடி

23—7—42 ல் இப்பாடசாலையின், மாணவர், பெற்றோர் சங்கங்களின் தினம் கொண்டாடப்பட்டது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பாலரத்தினமய்யர் அவர்கள் தலைமை வகித்து, பெற்றோர் ஆசிரியர் ஒத்துழைப்பால் இப்பாடசாலை அபிவிருத்தி யடைந்திருப்பதைப் பற்றி பாராட்டிப் பேசினார். மற்றும் ஆசிரியர்கள், மாணவர் கடமை, வாலிபர் கடமை, சமூக முன்னேற்றம் முதலிய விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். பாடசாலை மாணவ மாணவிகளால் 'குமணன்' என்னும் நாடகம் திறமையுடன் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

---

## ஆரம்ப ஆசிரியர் கழகம், வெண்ணந்தூர்

12—12—42 ல் இச்சங்கத்தின் ஆண்டு விழா டிப்டி இன்ஸ்பெக்டர் ஜனாப் முகம்மது காதர் பாஷா சாகிப் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகளால், கும்மி கோலாட்டமும், பெரியோர்களால் உபந்நியாசங்களும் நடந்தன.

---

## போர்டு ஆண் பாடசாலை, மெணிசி

23—11—42-ல் இப்பாடசாலை பெற்றோர் சங்கம் கூடிற்று. பள்ளிப்பட்டி ரெவினியூ இன்ஸ்பெக்டர் தலைமை வகித்தார். பிறகு, ஆசிரியர் ஸ்ரீ ரேது மாதவ சாஸ்திரி, தற்கால யுத்தத்தைப்பற்றியும், ஸ்ரீ சுப்ரமணியம் கல்வியின் அவசியத்தைப்பற்றியும், ஸ்ரீ சிவராமன் பெண் கல்வியைப்பற்றியும், ஸ்ரீ பெரியசாமி கிராம சுகாதாரத்தைப் பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள்.

---

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, பாபிரெட்டிபட்டி

2—12—42-ல் இவ்வூர் ஆதித் திராவிடர் தெருவில் பெற்றோர் சங்கம் கூடிற்று. சுமார் 300-க்கு அதிகமான ஆதித் திராவிடப் பெற்றோர்கள் குதூகலத்துடன் ஆசிரியர்களையும் பல பிரமுகர்களையும், வரவேற்றனர். ஸ்ரீ அங்கண்ணச் செட்டியார் தலைமை வகித்தார். கல்வியும் யுத்தமும் என்பதுபற்றி ஸ்ரீ சுப்ரமணியம் பிரசங்கம் செய்தார். 'சேரியின் நிலைமை' என்பதுபற்றி ஸ்ரீ மாணிக்கம் பேசினார். 'நம் சேரியும் பள்ளிக்கூடமும்' என்பதுபற்றி தலைமை ஆசிரியர் ஸ்ரீ சிவராமன் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

---

## சேலம் சிட்டி முனிசிபல் எலிமெண்டரி டீச்சர்ஸ் யூனியன்

13—12—42-ல் இச் சங்க மகா சபை கூடிற்று. தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு மகா சபை மீட்டிங்குக்கு குறைந்த ஆஜர் **(Quorum)** நிர்ணயிக்கப்பட்டது. டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு ஓர் வரவேற்புப் பத்திரம் அளிக்கவும், பெண் பாடசாலை ஆசிரியைகள் தனியாக டிபார்ட்மெண்ட் மீட்டிங் நடத்த உத்தரவளிக்கும்படியும், டிபார்ட்மெண்டு சங்கத்திற்கு சந்தாவைக் குறைக்கும்படியும், கல்வி யதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளத் தீர்மானித்தது. 1933-க்குப் பின் சர்வீஸில் இருக்கும் ஆசிரியர்களுக்கு முழுச் சம்பளத்துடன் மெடிகல் லீவும், இம் முனிசிபாலிட்டியில் சில ஆசிரியர்களுக்குப் புது ஸ்கேல் சம்பளத்தை

பழய ஸ்கேல்படி ஹையர் இரேடுக்கும், செகண்டரி இரேடுக்கும் கொடுக்கும்படியும், கல்வி இலாகா தலைவருக்கு சிபார்சு செய்யும்படி தென்னிந்திய ஆசிரிய சங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறது.

---

போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, சங்கரிதுர்க்கம்

சுகாதார வாரக் கொண்டாட்டம்

16—12—42. தலைவர் :—ஸ்ரீ **D.** பாலசுந்தரம் **B.A.**, சப் கலெக்டர். சொற்பொழிவாளர் :—**Mr.** ஜார்ஜ், ஹெல்த் இன்ஸ்பெக்டர். விஷயம் :—சுகாதாரமும், காலராவைத் தடுக்கும் முறையும்.

17—12—42. மாணவ மாணவிகளின் விளையாட்டுகள்.

18—12—42. சொற்பொழிவாளர் :—ஸ்ரீ **K.** நாராயண நாயர், விவசாய டிமான்ஸ்டிரேடர், விஷயம் :—ஆகாரப் பொருள்கள் குறைவும் அதைத் தடுக்கும் வழிகளும்.

19—12—42. சொற்பொழிவாளர் :—(1) டாக்டர். **K. G.** நாயர், விஷயம்: —பாடசாலையும், சுகாதாரமும். சொற்பொழிவாளர் :—(2) ஸ்ரீ O. ஆராவமுத அய்யங்கார், டிப்டி இன்ஸ்பெக்டர். விஷயம்:—உபாத்தியாயர்களும் முதல் உதவிப் பயிற்சியும்—ஆதித் திராவிட சேரிகள் பரிசோதிக்கப்பட்டு மிகவும் சுத்தமாய் இருந்தவைக்குப் பரிசு அளிக்கப் பட்டது.

20—12—42. தலைவர்—ஸ்ரீ **D.** பாலசுந்தரம்,—மாணவர்கள் பந்தயப் போட்டிகள், சம்பாஷணைகள். சுகாதார பார்க்குகள் ஏற்படுத்த நிதி வசூலிக்கப்பட்டது.

**21—12—42.** காலை, சுமார் 1,500 ஏழைகளுக்கு அன்ன மளிக்கப்பட்டது. மாலை, தலைவர் :—**Dr. R.** ஜான், **L.M.P.**, விஷயம் :—குழந்தைதளின் வளர்ச்சியும், கர்ப்ப ஸ்திரீகளின் பராமரிப்பும். குழந்தைகள் காட்சியும் நடைபெற்றது. ஏராளமான தாய்மார்கள் குழந்தைகளுடன் வந்தனர். நன்ருய் போஷிக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன.

22—12—42. தலைவர்:—ஸ்ரீ **D.** பாலசுந்தரம்: மாணவ மாணவிகளால் சம்பாஷணை, கும்மி, கோலாட்டம் முதலியனவும், கடைசிநாள் விளையாட்டுப் பந்தயங்களும். சொற்பொழிவாளர் :—ஸ்ரீமதி இந்திராணி, பால சுப்ரமணியம் பரிசுகள் வழங்கிய பிறகு சுகாதாரக் கொண்டாட்டமும் அதன் நோக்கமும் என்பதுபற்றிப் பேசினார்கள். கடைசியில் ஸ்ரீ S. செல்லப்பன், ஹெட்மாஸ்டர், போர்டு ஆரம்ப பாடசாலை, சங்கரிதுர்க்கம் எல்லோருக்கும் வந்தனோபசாரம்கூற விழா இனிது முடிவுற்றது.

---

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, கெங்கவல்லி

### சுகாதார வாரம்

21—12—42. தலைவர் :—ஸ்ரீ A. S. பாலசுப்ரமணிய அய்யர், கிராம முனிசீப், சொற்பொழிவாளர் :—ஆசிரியர் தியாகராஜ நாயனார், விஷயம் :—குழந்தைகளை வளர்க்கும் வழி.

22—12—42. தலைவர் :—ஜனாப் அபுபக்கர் சாகிப், வியாபாரி. சொற்பொழிவாளர் :—ஸ்ரீ K. சுப்ரமணிய அய்யர். விஷயம் :—தொத்து வியாதிகள்.

27—12—42. தலைவர் :—ஸ்ரீ பெரியசாமி மூப்பர், மிராசுதார். சொற்பொழிவாளர் :—ஸ்ரீமதி சின்னம்மாள் உதவி ஆசிரியை, ஸ்ரீமதி இருதயமேரி தலைமை ஆசிரியை, விஷயம் :—சுகாதாரம்.—மாணவ மாணவிகளால் விளையாட்டுகள்; கும்மி கோலாட்டம் முதலியன நடை பெற்றன.

6—12—42-ல் ஆசிரியர்களும் மாணவர்களும் கொல்லிமலைக்கு உல்லாசப் பிரயாணம் சென்று வந்தனர்.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், நடுக்காவேரி

19—12—42-ல் இச் சங்கத்தின் முதல் ஆண்டு விழா ஸ்ரீ V. குருஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. பக்கத்தூர்களிலுள்ள பல ஆசிரியர்களும் தங்கள் மாணவ மாணவிகளை அழைத்துவந்து, கும்மி, கோலாட்டம், ஆடல் பாடல் முதலியவைகளால் எல்லோரையும் மகிழ்வித்தனர். மேரி மஹாராணி பாடசாலை மாணவர்கள் 'ராமதாஸ்' நாடகத்தில் ஒரு பாகத்தை திறமையாக நடித்துக் காட்டினர். தலைவர் அவர்கள் பரிசுகள் வழங்கிய பிறகு, இச் சங்கத்தைத் தென்னிந்திய ஆசிரிய சங்கத்துடன் இணைத்துக்கொண்டு அதன் முழுப் பிரயோஜனத்தை அடையுமாறு தமது கருத்தை வெளியிட்டார். வந்தனோபசாரம், சந்தண தாம்பூலம், சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

---

## திருவள்ளுவர் உயர்தர ஆரம்ப பாடசாலை, வீரவநல்லூர்

11—12—42-ல் இப் பாடசாலை பெற்றோர் சங்கம், ஸ்ரீ மாணிக்கவாசகம் அவர்கள் தலைமையில் கூடிற்று. பல பெற்றோர்களும் பிரமுகர்களும் வந்திருந்தனர். ஸ்ரீ ஈசுவரமூர்த்தி ஓதுவார் சங்கீத கோஷ்டியின் இசை அரங்கு நடைபெற்றபின், மாணவ மாணவிகளால், சம்பாஷணை, அபிநயப்பாட்டு முதலியனவும், 'இராஜ்ய ஸ்ரீ'யிலிருந்து நான்கு காக்ஷிகளும் நடைபெற்றன. தலைவர் பெற்றோர்களின் ஒத்துழைப்பைப்பற்றி உபந்யசித்தார். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

# கடிதப் பெட்டி

முசிரி தாலுகா, போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன்

மகாசபை கூட்ட நோட்டீஸ்

நாளது 1943-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ந்தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 11-மணிக்கு முசிரி போர்டு ஆரம்ப ஆண் பாடசாலைக் கட்டிடத்தில் ஒரு மகாசபை கூட்டம் நடைபெறும். அதுகாலை ஆசிரியர்கள் அனைவர் வரவும் எதிர்பார்க்கப்படுகிறது.

24—1—43 காலை 10 மணிக்கு நிர்வாக சபைக்கூட்டம் ஒன்றும் நடைபெறும் அன்று மாலை நடைபெறவிருக்கும் யூனியனின் முதலாவது ஆண்டு விழாவிற்கு ஜில்லா போர்டு தலைவர் அவர்கள் தலைமை வகிக்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பச்சைபெருமாள்பட்டி,
1—1—'43

S. தனபாக்கியம்,
காரியதரிசி.


மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

**சுவாமி விவேகாநந்தர்**

**ஞான அமிர்தத்தை உண்ணுங்கள்.**

★

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த | சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

# மதிப்புரை

**இந்தியக் கதைத் திரட்டு**

தொகுத்தவர்: சு. குருசாமி, **B.A., L.T.**

முகவுரை: எழுதியவர் டாக்டர். ப. சுப்பராயன்.

பிரசுரகர்த்தர்: அலயன்ஸ் கம்பெனி, விலை ரூ. 2—4—0

மொழி வளர்ச்சிக்கு, சிறுகதைகள் மிக அவசியம். மேல்நாட்டுக் கதைகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. அதைப் படிப்பவர்க்கு நம் நாட்டில் இவ்வாறான கதைகள் இல்லையா என்ற எண்ணம் உண்டாகலாம். ஒரு தேசத்துச் சிறுகதைகளே, அத்தேசத்தின் சிறப்பையும், அந்நாட்டு மக்களின் மேன்மையான குணங்களையும் நன்கு எடுத்துக்காட்டும். ஏனென்றால் கதைகள், உண்மையானதாக இல்லாமல் போனாலும், நாட்டின் குணங்களும், லக்ஷியங்களும் அவைகளில் கண்டிப்பாய் காணப்படும். எனவே ஒரு நாட்டின் சிறப்பை விமர்சனப் படுத்துவது அந்நாட்டுக் கதைகளேயாகும். அலயன்ஸ் கம்பெனியார் அச்சேவையில் ஈடுபட்டு காகிதப் பஞ்சகாலத்திலும். தாங்கள் ஆரம்பித்தத் தொண்டை விடாது செய்துவருவதற்கு தமிழ் உலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. தவிர. இப்புஸ்தகம் ஆண்டிக் காகிதத்தில் நன்கு பிரசுரிக்கப்பட்டது பாராட்டத்தக்கது.

இப்புத்தகத்தில் 11 கதைகள் அடங்கியுள்ளன. இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இந்திய பாஷையினின்றும் மொழி பெயர்த்துள்ளது. வங்காளி, குஜராட்டி, ஹிந்தி, உருது, அஸ்ஸாமி. தெலுங்கு, கன்னடம், மராட்டி, மலையாளம், தமிழ் ஆக பத்து பாஷைகளினின்றும் பொருக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. ஹிந்திக் கதைகள் மாத்திரம் இரண்டு இருக்கின்றன. எந்தக்கதை மிக நன்றாக இருக்கிறது என்று சொல்லமுடியாது ஒவ்வொன்றும் நன்றாகத்தானிருக்கிறது. தவிர, இவைகள் மொழி பெயர்ப்புபோல் காணப்படவில்லை. தமிழிலேயே முதன் முதலாக எழுதியிருந்தால் எப்படி இருக்குமோ அப்படியே இருப்பது. மொழி பெயர்த்துத் தொகுத்த நண்பர் குருசாமியின் பெருமையை நன்கு விளக்குகின்றது.

எஸ்ஸேன்.

---

## ஓர் ஆரம்ப ஆசிரியரின் சுற்றுப் பிரயாணம்

நான் கல்வி சம்பந்தமாய் வெகுதூரம் சுற்றுப் பிரயாணம் செய்து வருவது ஆசிரியர் பணியுடன் ஒன்றாய் சகஜமாகிவிட்டது. சென்ற மூன்று கோடைகால விடுமுறை நாட்களில் கல்வி மகாநாடுகளுக்கு சைகிள் பிரயாணமாகவே சென்று வந்தேன். அவ்வாறு சுமார் 3350-மைல்களுக்குமேல் யாத்திரை செய்து கன்னியாகுமாரி, திருவனந்தபுரம், ஆலப்பிழை, கொல்லம், அம்பாசமுத்திரம், கோயம்புத்தூர், சேலம், வட ஆற்காடு, சித்தூர், திருப்பதி, ரிஷிவனம், மதராஸ், செங்கல்பட்டு, தஞ்சாவூர், தென் ஆற்காடு முதலிய இடங்கள் யாத்திரை செய்து இயற்கை அழகு, சரித்திரக்கீர்த்தி, வியாபாரக்கீர்த்தி உள்ள பல பாகங்களை தென்னிந்தியாவில் பார்க்கவும் சுலபமாக கிடைக்காத இப் பாக்கியத்தை எனக்கு பல பெரியோர்களும், நண்பர்களும் விரிவுரை மூலமாகவும் என் பொது நல நிதிக்கு உதவி அளித்தார்கள். அனைவருக்கும் என் நன்றி உரித்தாகும். வட இந்தியா யாத்திரைக்கும் தங்கள் உதவியை கோருகிறேன்.

*Aryan School* S. S. சீனிவாசய்யங்கார், *Teacher & Cycle Tourist, Trichy*

# பத்திராதிபர் குறிப்பு

## முதியோர் கல்வி

எல்லா மாகாணங்களிலும் கல்வியறியாமை ஒழிக்க முதியோர் கல்வி அவசியம் என்பதை உணர்ந்து முதியோர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொடுக்க தீவிர ஏற்பாடுகள் செய்துவரப்படுகின்றன. ஐக்கிய மாகாணங்களில் 1941-42ல் 1,53,185 முதியோர்கள் எழுத்தறிவுள்ளவர்களாக மாற்றப்பட்டனராம். பஞ்சாபில் முதியோர் கல்விக்காக 3897 பாடசாலைகள் ஏற்படுத்தி அவைகளில் 1,06,473 நபர்கள் படித்துவருகிறார்களாம். வங்காளத்தில் 10,000 வகுப்புகள் ஏற்படுத்தி அவைகளில் 1,50,000 முதியோர்கள் எழுதப்படிக்க பயில்வதாகத் தெரிகிறது. நம் மாகாணத்திலோ பாலர்கள் கல்வி கற்றுக்கொண்டால் போதும் என்பது போல் முதியோர் கல்வியில் துரைத்தனத்தார் வேண்டிய ஊக்கம் காண்பிக்கவில்லை. முதியோர் கல்விக்காக வகுப்புகள் நடத்துவதற்கு, ஜில்லா மாஜிஸ்திரேட் உத்திரவு பெற்றே நடத்தவேண்டுமென்ற தடை உத்திரவையும் பிறப்பித்துவிட்டார்கள். இதற்குக் காரணம் சரிவர தெரியவில்லை. எனினும், தற்கால முதியோர்களின் எழுத்தறியாமையை நீக்கினால், அவர்களுக்கு கல்வியின் அவசியம் விளங்கும். குழந்தைகளின் கல்வித்தேர்ச்சியில் சரியான ஆர்வம் கொள்வர். தவிர, அவர்களின் வாழ்க்கையே இன்புறும். அதிக சீக்கிரத்தில் நாட்டில் எழுத்தறியாமையையும் ஒழித்துவிடலாம் எனினும் நமது கல்வி இலாகா அதிகாரிகள் இவ்விஷயத்தில் போதுமான கவனமும், ஊக்கமும் கொள்ளாதது மிகவும் விசனிக்கத்தக்கதே.

முதியோர்கல்வி விஷயத்தில் ஸ்ரீமான் ரோச்விக்டோரியா, போன்ற பிரமுகர்கள் உண்மை நம்பிக்கை வைத்திருப்பதினால் நமது மாகாணத்தில் சில இடங்களில் முதியோர்கல்வி வகுப்புகள் ஏற்படுத்தி முதியோர்களின் எழுத்தறியாமையை நீக்கி வருகின்றார்கள். தூத்துக்குடிக்கருகில் ஸ்ரீமான் ரோச்விக்டோரியா நடத்திவரும் **Adult Education Centre** நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். வட ஆர்க்காடு ஜில்லாவில் செங்கம் தாலூக்காவைச்சேர்ந்த 25 கிராமங்களில் எழுத்தறியாமை ஒழிக்கும் சங்கங்கள் பல ஸ்தாபிக்கப்பட்டு, இக்கிராமங்களிலுள்ள ஒவ்வொருவருக்கும் எழுதப்படிக்கவேண்டிய பயிற்சி அளிக்கப்பட்டு வருவது போற்றத்தக்கது. தாலுக்கா அட்வைசரி கமிட்டியின் ஆதரவில் இவ்வேலை நடைபெற்று வருகிறது. ஸ்ரீமான் M. B. ரங்கசாமி நாயுடு, இக்கமிட்டியின் தலைவர். தமது தாலூக்காவில் கைநாட்டுப் பேர்வழி இருக்கக்கூடாது என்று உறுதிகொண்டுள்ளார். அவருக்கு உதவியாக செங்கம் தாலூக்கா வாசியும், வடஆர்க்காடு ஜில்லாபோர்டு கல்விக்கமிட்டியின் மெம்பருமான ஸ்ரீமான் N. வரதராஜ ரெட்டியாரும் இவ்வியக்கத்

தில் ஈடுபட்டுள்ளார். நமது மாகாண முதியோர் கல்வி சங்கத்தின் கௌரவ காரியதரிசியாகிய ஸ்ரீமான் **T. R. J.** கோபால் என்பவர் இவ்வியக்கத்தின் கௌரவ நிர்வாகஸ்தர். செங்கம் தாலூக்கா டிபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் **A. G.** வில்வராய், மேல்பார்வை செய்து உதவி செய்து வருகின்றார். எவ்வாறு இவ்வேலை நடைபெறுகிறதென்பது விவரமாக அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும். இக்கிராமங்களிலுள்ளோர் மிகவும் சிரத்தை காட்டி வருகிறார்களாம். செங்கம் தாலூக்காவில் நிறைவேறக்கூடியது மற்ற தாலூக்காக்களிலும் நடைபெறக் கூடாதா?

---

### உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடம்

அநேகமாக ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டிலும், உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் ஆங்கிலம் ஒரு கட்டாயப் பாடமாக அமைக்கப்பட வேண்டுமென்றும், 8 வது வகுப்பு பரிக்ஷை தேரினவர்கள் செகண்டரி ஸ்கூல்களில் 4 வது உயர்தர வகுப்பில் சேர்த்துக்கொள்ளப் படவேண்டுமென்ற தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகிறது. 8 வது ஆரம்ப வகுப்பு பரிக்ஷை தேரியவனை ஏன் 4 வது உயர் வகுப்பில் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று பலர் கேட்கின்றனர். இதிலிருந்து உயர்தர ஆரம்பக் கல்வியின் நோக்கத்தை இவர்கள் சரிவர உணரவில்லையென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள ஆரம்பப் பள்ளிக் கூடங்களை இப்பொழுது பூர்த்தியான ஆரம்பப் பள்ளிக்கூடம் என்று வழங்குகிறார்கள். சாச்வத எழுத்தறிவை ஐந்தாம் வகுப்பு படித்தவர்கள் அடைவார்கள் என்பது இத் திட்டத்தின் முக்கிய கருத்து. ஆரம்பக்கல்வியின் முக்கிய நோக்கம் நம் நாட்டிலுள்ளோர் எல்லோரும் இச் சாச்வத எழுத்தறிவை பெருவதேயாகும். இம்மாதிரிசெய்ய, கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால்தான் முடியும். ஆனால் அதற்குப் போதுமான பணம் இல்லாததினால், பற்பல தூண்டுதலின் உதவியால், செலவழிக்கும் பணத்திற்கு எத்தனை பாலர்களை சாச்வத எழுத்தறிவு பெறும்படி செய்யமுடியுமோ, அத்தனை பேர்களை பள்ளிக்கூடத்தில் சேர்க்கவும், ஐந்தாம் வகுப்பு தேர்ச்சியடையும்படியும்செய்ய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

முன்னேற்றமடைந்த நாடுகளில் மக்களுக்கு அளிக்கப்படும் ஆரம்பக்கல்வியின் நோக்கம் இதைவிட விசாலமானது. 16 ம் வயது வரையில் பாலர்கள் கட்டாய ஆரம்பப்படிப்பு படிக்கவேண்டுமென திட்டங்கள் சில நாடுகளில் இருந்து வருகின்றன. பலநாடுகளில் அம்மாதிரியான திட்டங்கள் யோசனையிலிருக்கின்றன. நம் நாட்டிலோ 11 ம் வயதில் ஒருவர் ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றால், அவ்விளம் வயதிலேயே படிப்பை நிறுத்திவிட நேரிடுகிறது. உயர்தரப் படிப்பு இலவசப் படிப்பு அல்ல.

கிராமங்களிலுள்ள, ஐந்தாம் வகுப்பு தேர்ச்சிபெற்ற உயர்தரப் படிப்புக்கு வசதியில்லாத சிறுவர்கள், தம் வாழ்க்கைத் தொழிலில் சேரும் வயது வரும் வரையில், அத்தொழில் சார்பான முற்பயிற்சியையும், அதைச் சரிவரச் செய்வதற்கான விஷயங்களையும், தம் வாழ் நாட்களை திறனுடன் நடத்த உதவக்கூடிய விஷங்களையும் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஆங்காங்கு உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே இவைகளின் நோக்கம் உயர்தரப் படிப்பு அளிப்பது அல்ல என்பது விளங்கும். உயர்தர ஆரம்பக் கல்விக்கும், உயர்தரக் கல்விக்கும் வித்தியாசங்களிருக்க வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளவேண்டும். உயர்தர ஆரம்பக் கல்வியின் நோக்கம், 11 ம் வயதில் பள்ளியை விடும் மாணவன் தன் வாழ்க்கைத் தொழிலுக்கு வேண்டிய முற்பயிற்சியை அடைவதும், வாழ்க்கைக்கு உபயோகமாயுள்ளவைகளை அறிவதுமாகும். உயர்தரக் கல்வியின் நோக்கம் இதினின்று முற்றிலும் மாறுனது. பல்கலை கழகப்படிப்பு, உயர்தர தொழில் படிப்பு முதலியவைகளுக்கு வழி காட்டிபோல் உள்ளது உயர்தர படிப்பு. எனவே ஆரம்பக்கல்வி, 8 வது வகுப்பு படித்தபின் படிப்பை நிறுத்தி விடுவோர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் கல்வியாகும். இவர்களுக்கு ஆங்கிலத்தில் தேர்ச்சி அவசியம் என்று சொல்ல முடியுமா? எனினும் பாட திட்டத்தில், இஷ்ட பாடப் பகுதியில் ஆங்கிலம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பது உபயோகமாயிருக்குமென்றால், அவர்களுக்கு அப்பாஷையில் பயிற்சி அளிப்பதில் ஒரு தடையும் இல்லை அதை இஷ்டபாடமாக படித்து வரலாம். செகண்டரி பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் கட்டாய பாடம் என்பது நேயர்களுக்குத் தெரியும்.

ஆனல் கிராமங்களில், உயர்தர படிப்புக்கு வசதி யில்லாத காரணத்தினல், உயர்தர ஆரம்பப்பள்ளிகூடத்தில் பயின்ற மாணவன்; உயர்தர படிப்புக்கு வேண்டிய சக்தியும் மனோபாவமும் உள்ளவனுயிருந்தால் அவன் உயர்தர வகுப்பில் சேர்வதற்கு வேண்டிய வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. 8 ம் வகுப்பில் தேர்ந்தவன், மூன்றும் உயர்தர வகுப்பில் சேர்ந்து கொள்ளலாம். இவர்கள் இஷ்ட பாடமாகப் படித்து ஆங்கிலத்தில் அடைந்த தேர்ச்சி உயர்தர 2 ம் வகுப்பு மாணவர்கள் அடையும் தேர்ச்சிக்குச் சமமாயிருக்கும்படி பாடதிட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விரு கல்வி திட்டங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசங்கள் நன்குணராததே மேற்சொல்லிய பிரச்னைகளுக்குக் காரணம் என்று கருதுகிறோம்

S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS
BAZAAR ROAD, VILLUPURAM.

## செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள் :

சேரும்போது
பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.
வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்
பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2
பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள் :

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... ... | ரூ. 2,25,000 |
| பாலிஸிக்கள் | ... ... | 1,350 |
| யூனிட்டுகள் | ... ... | 2,500 |

## அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினுல், கிடைக்கக் கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

*Regd. No M. 3473*




# புதிய எண்ணங்களுக்கு

மாணவர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் டீயை மிக விரும்புவதேன்? டீ மூளைக்கு ஊக்கமளித்து புதிய புதிய எண்ணங்களை வெளியிட உதவுவதால் தான். மற்றெந்த பானத்திற்கு மில்லாத ஓர் விசேஷ குணம் டீக்கு உண்டு. அது மூளையை சுருசுருப்பாக்கி கற்பனா சக்தியை விருத்தி செய்யும் குணமே. புதிய எண்ணங்களைப் பெற டீ அருந்துங்கள்.




டீ தயாரிக்கும் முறை: சுத்தமான தண்ணீரைக் கொதிக்க வைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும், அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப் போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு, ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# இந்தியன் டீ

**சர்வ சாதாரணமான பானம்**

இந்தியன் டீ மார்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

I.K.147.V.


**Printed by** K. Sadagopachariar **at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S. Sabhesan,** M.A., **"for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.**